ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 642/9—1990 දෙසැම්බර් 27 වැනි බ්‍රහස්පතින්දා—1990.12.27
642/9 ஆம் இலக்கம்—1990 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ம் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச.வ.—பி 21/78 II

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

1989 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1978 ஆம் ஆண்டின் 16 ஆ இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்கு வினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

திருமதி சீ. எஸ். கருணாரத்ன,
செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

கொழும்பு,
1990. திசெம்பர், 27

கட்டளைச்சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம், 1990 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க பட்டவகுப்புக்கு மேற்பட்ட பாளி, பௌத்தக் கற்கை நிறுவக (திருத்த கட்டளைச்சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம் என்பதுடன் 1990 திசெம்பர் 28 ஆம் தேதியன்று வலுவிற்கு வருதலும் வேண்டும்.

2. 1979 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ஆந் திகதிய 68/3 ஆம் இலக்கம் கொண்ட அதி விஷேட கசெற்றில் வெளியிடப்பட்ட 1979 ஆ ஆண்டின் 08 ஆம் இலக்க பட்ட வகுப்புக்கு மேற்பட்ட பாளி, பௌத்தக் கற்கை நிறுவகக் கட்டளைச் சட்டத்தின் II ஆம் பந்தியானது, அதன் (6) ஆ உட்பந்திக்குப் பதிலாகப் பின்வரும் உட்பந்தியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

> "(6) சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து அமைச் தீர்மானிக்கும், அத்தகைய ஊதியம் அல்லது படிகள் கொடுக்கப்படல் வேண்டும்".